REGD No M 4044

# திராவிட நாடு

விலை அணா 2, சிலோன் 15 சதம்

மலர் 10 | 1—6—52 | இதழ் 48

## 'நானும்' 'நாமும்'

அண்ணா

"நான்"—"நாம்"

இந்த இரு வார்த்தைகளால் ஏற்பட்ட, பிணக்குவியலும், வாள் ஒலியும், குண்டு முழக்கமும், வேட்டுச் சப்தமும், விடுதலை முழக்கமும், விளைவுகளும், விபரீதங்களும், ஏராளம். "நான் சொல்கிறேன்—மன்னனாகிய நான் கட்டளையிடுகிறேன்" என்று 'தானே யாவும்' என்பதாக தருக்குக்கொண்டலைந்த மன்னாதி மன்னர்களை, "நாங்கள் கேட்கிறோம்,' என்கிற மக்களின் குரல், வீழ்த்தி வெற்றி பெற்ற நிகழ்ச்சிகள், சரிதத்தில் மிகப் பல உண்டு. இங்கிலாந்து நாட்டில் முதலாவது சார்லஸ்! பிரான்சுக்கு ஒரு லூயி! ரஷ்யாவுக்கு ஒரு ஜார்! — இவ்விதம் "நான், நான்" என்று மமதை கொண்டு மக்களை மிரட்டிய கிரீடமேந்திகள், கடைசியில் "நாம் வாடுவதா?" என்று கிளம்பிய 'ஏழை எரிமலை' களால், பொசுக்குண்டுபோயினர். மக்களை நாய்களினும் கேவலமாக மதித்து, 'கடவுளின் பிம்பம் நான்' என்று கதைகள் கூறிய, இந்த சிம்மாதன தாரிகளை, மக்களின் சீற்றம், தூக்குமேடையிலே கொண்டு நிறுத்தித் துண்டாடிற்று! மணிமுடி தரித்ததால் 'நான் கூறுகிறேன்' என்று எக்காளமிட்ட அவர்தம் தலைகள், தரையிலே உருண்டன!!

மன்னர்கள்மட்டுமல்ல —மக்களை மதியாத காரணத்தால், கேடுற்று, சீர்கெட்டு சிதைந்தது; மக்களின் தலைவர் என்று ஒருபோது போற்றித்துதிக்கப்பட்டோரும் "நான்" என்கிற மமதைகொண்டால், அதே மக்களால் வீழ்த்தப்பட்டிருக்கின்றனர். வியர்வை சிந்தி உழைத்து, பூமாலையும் வாழ்த்துதலும் பெற்று, 'தேசபிதா' 'தந்தை அவரே' 'ஒரே தலைவர்' என்று மகிழ்ச்சிப் பெயர் சூட்டி, 'மாவீரர்' என்றெல்லாம் கொண்டாடப்பட்ட பொதுஜன தலைவர்களும், 'நாம் செய்வோம்' என்று மக்களையும் அனுசரித்துப் பேசாது, திமிர் கொண்டோராக, கையிலே துப்பாக்கியும் குரலிலே கடுமையுமாக, துரைத்தனப்பாதையில் செல்லத்துவங்கியதால், சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கின்றனர்—கடைசிகாலத்தில். கொல்லனின் மகனாகப் பிறந்து, ஏழையுலகின் கண்ணீரைக்கண்டு கலங்கி, 'இவர் ஏன் வாடுவது — பிறர் ஏன் வாழுவது?' என்று கோபாக்கினியோடு கேள்விகள் எழுப்பி, சண்டமாருதமெனப் பிரசங்கம் செய்து, மக்களின் 'மனதெல்லாம்' நிறைந்து, தலைவனாக ஆனான் இத்தாலி நாட்டில், முசோலினி! இத்தாலியில் அவனுக்கிருந்த செல்வாக்கும் சிறப்பும், அவன் பிடித்த பேனாவுக்கிருந்த வலிமையும கவர்ச்சியும், கீர்த்தியும் பெருமையும் இன்னதென்று கூறமுடியாது. மேடையில் பேச எழுந்தால், ஜனசமுத்திரம் எழுப்பும். ஆனந்தமுழக்கம் அடங்க வெகுநேரம் பிடிக்குமாம்! கையை யுயர்த்தி அவன் நிமிர்ந்து நின்றால், கடல்போல முழக்கமிட்ட மக்களின் கூச்சல் அரைவிநாடியில் ஓயுமாம்!! ஏழையாகயிருந்து, சர்க்காரின் துப்பாக்கிகளுக்குத் தப்பி, சமதர்ம கீதம் எழுப்பிய முசோலினிக்கு இவ்வளவு கீர்த்தி இருந்தது. எதைசொன்னாலும் கேட்டனர், மக்கள். நாவும் பேனாவும்—இத்தாலிய மக்களின் இதயங்களையெல்லாம் துளைத்தது—'இவனே—எம்பிதா' என்று முழக்கமிடச் செய்தது. ஆனால் பின்பு! பொதுஜனத்தலைவன் ஆட்சி பீடம் ஏறியபின்பு! 'நானே சர்வாதிகாரி' எனப் பிரகடனப்படுத்திய பின்பு!

"நாம்போராடுவோம்—வாழ!" என்பதை மறந்து "நான் சொல்லுகிறபடி கேளுங்கள்" என்கிற வார்த்தைகள் அவன் உதட்டைத் தாண்டி வெளிவந்தபோது மக்களின் இதயத்தை மலர்விக்கவில்லை — அவன் நாமம்; கிழித்தது, துளைத்தது. "நான்" என்பது அவன் கர்ஜனையில் இடம் பெற்றபிறகு, அவனது பாதை மாறிற்று. 'பாசிஸ்டபேய்' என்றனர் மக்கள் — "எல்லா அதிகாரமும் என்னுடையதே. நான்தான் சர்க்கார்" என்று அவன் பிரகடனப்படுத்தியது கண்டு, 'குமுறினர்' கொதித்தனர்! கடைசியில், எதிரே போர்வீரர்கள் நிற்க, அவர்தம்கரங்களிலே துப்பாக்கிகள் இருக்க, அவன் ஒருவன்மட்டும் 'கைதி'யாக நின்றான். பல துப்பாக்கிகள் அவன் உடலைத் துளைத்தன

வீழ்ந்தான் பிணமாக. அந்தப்பிணம் எடுத்துச் செல்லப்பட்டபோது, காரியுமிழ்ந்தனராம். அவனை 'தேச பிதா' என ஒருபோது, போற்றிப் புகழ்மாலை தந்தமக்கள்!! இதே கதி தான், "ஆரியராஜ்பத்தை எங்கும் நிலைநாட்டுவேன்" என்று கர்ஜனை எழுப்பிய ஹிட்லர் அடைந்தான். 'என்ன ஆளுன்' என்பதே அறிய முடியாத நாச்மானுன், ஹிட்லரும் ஆதியில் பொதுஜனத் தலைவனுக இருந்தவன்தான். சாதாரண 'பெயிண்டராக' இருந்த அடால்ப் ஹிட்லர், மாபெரும் கட்சியொன்றுக்குத் தலைவனுக வந்தபோது — அவனைப்போற்றுதாரில்லை. 'எமது குறைதீர்க்கவந்த மாவீரன்' என்று போற்றப்பட்டான். அவன் ஸ்தாபித்த தேசீய சோஷியலிஸ்டுக்கட்சி (நாஜிசக்கட்சி)யை, மக்கள் மனமார வரவேற்றனர். "ஹெர் ஹிட்லர்!"— இந்த முழக்கம் ஜெர்மெனியில் எழும்பாத இடமில்லை. அவ்வளவு செல்வாக்கோடு விளங்கிய அவன் 'நாம்' மறந்து, நான் இடும் கட்டளை இது' என்றுகர்ஜிக்கத்துவங்கினுன். "சர்க்கார் வைத்ததே சட்டம் — நான்தான் சர்க்கார். இதுதான் நாஜீசம்" என்றுன். நாஜிசப்பேய் — என்றனர், அவன் நடத்தை கண்ட நல்லோர். உலகமே தூற்றிற்று! கடைசியில், அவன் உயிர் போன விபரமே தெரியவில்லை!! இன்றைய ஜெர்மானியில், அவன் பெயர், ஒரு எரிச்சல் வார்த்தை. இதே நிலையில்தான் இருக்கிறுர், சீனுவின் பிதாவெனப்போற்றப்பட்ட, சியாங்கே ஷேக், இன்று!!

'நாசீசம்', 'பாசீசம்' — இரண்டின் காவலரும், ஆரம்பத்தில் தமது பொது வாழ்க்கையை நன்னேக்கோடு ஆரம்பித்து, செல்வாக்கு வந்ததும், திசையைத் திருப்பி, மக்களை மறந்து, கனதனவான்களின் கைலாகு பெற்று, சர்வாதிகாரியாகி, சிதைந்து, அழியாத அவமானச்சின்னங்களாகினர். "நாம்" என்கிற கூட்டுச் சொல் மறந்து, "நான்" எனும் சர்வாதிகார பாதையில், கெட்டழிந்தனர் — இவர்கள் எல்லாம்.

நாம்—நான்! மக்களும்—மமதையும்! கூட்டுறவு முழக்கமும்—கொக்கரிப்பவனும்!!

* * *

"நாங்கள் வாடுகிறேம், ஐயா"

"நான் என்ன செய்யமுடியும்?"

"நாம் வாட, அவர்கள் வாழ்வதா?"

"என்னையா எதிர்க்கிறீர்கள்?"

வாழமுடியாதோருக்கும்; அவரை வாட்டி வதைப்போருக்கும் ஏற்பட்ட மோதுதலால், பிணங்கள் பல வீழ்ந்த பிறகு, இரத்த வெள்ளம் ஓடியபின்பு, கேள்வி எழுப்பியோர், வெற்றி பெற்றிருக்கிறுர்கள். "நான்" என்று மமதையோடு பேசிய சார்லஸ், லூயி, ஜார் இவர்களின் எலும்புகள் கூட இல்லை— இன்று. 'சர்வாதிகாரி' என்று உலகையே அலறச்செய்த அக்கிரமக்காரர்களின் சந்ததிகூட மிஞ்சவில்லை மன்னர்கள்! சர்வாதிகாரிகள்!! முதல் ரகம், மமதையாலும் தனது ஆடம்பரத்தாலும் மக்களின் மன எரிச்சலைத் தூண்டி, மதிகெட்டு சேட்டைகள் புரிந்து, மக்களால் வீழ்த்தப்பட்டார்கள். சர்வாதிகாரிகளோ, மக்களை ஆளும் அதிகாரங்களைப் பெற்று, நாடுபிடிக்கும் ஆசைக்கு ஆளாகி, 'என் குடைக்கீழ் இந்த ராஜ்யங்கள் அனைத்தையும் கொண்டுவருவேன்' எனக் குதித்து கொடுமைகள் பல புரிந்து, இருந்த இடம் தெரியாது போயினர். 'ரோம் சாம்ராஜ்யம் ஒரு காலத்தில் ஒளி வீசிப் பிரகாசித்ததாம்—அதைப்போல, இத்தாலி சாம்ராஜ்யம், சிருஷ்டிப்பேன்' என கனவு கண்டான் பாசீசத் தலைவன்! 'ஆரிய சாம்ராஜ்யம் அமைப்பேன்' என்று அண்டை அயல் நாடுகளையெல்லாம் விழுங்கினுன், ஹிட்லர்!! கடைசியில என்னவாயிற்று? மமதை, மண்ணுக்குள் புதைந்தது! கர்ஜனை, காற்றோடு போயிற்று! வீழ்ந்தனர் — அழிந்தனர் — அழியாத அவமானத்தைத்தேடிகொண்டனர்.

நான்கு பக்கமும் தன்கரம்விரிந்து பரந்து கிடக்கும் என்ராஜ்யம்—எனக் கனவு கண்டோரின் கதி, இது. 'நான்' வைத்ததுதான் சட்டம் என வெறியோடு உலவியோர் வீழ்ச்சியுற்ற சம்பவம், அது.

இந்த உண்மையை இன்றும் பலர் உணர்ந்தாரில்லை—பழைய மன்னர் பாணியிலேயே பேசுகின்றனர்— நடக்க எண்ணுகின்றனர்.

"நாம்" கூட்டு முயற்சியின் விளைவாகப் பிறக்கும் சொல். வாழமுடியாத மக்களுக்காக உழைக்கும் உறுதியும் தாகமும் பெற்றிருப்போர் கூவுகிற சொல். சமுதாயம் எழுப்பும் நாதம்! எல்லோரும் சமம் என்று எண்ணுவோர் முழக்கும் கீதம்! ஆனுல், இது, சர்வாதிகாரிகளுக்கும், 'சர்வமும் எனதே' எனக் கூறும் சக்கரவர்த்திகளுக்கும் பிடிக்காது — "நான்" வந்துவிடும். இதை அதிகமாகவும், அழுத்தமாகவும் உச்சரிக்கும் தைரியமும் வானளாவும் — அதிகார போதை, ஏறஏற. 'எனது' 'என்னுடைய ஆட்சி'—இப்படி, அவர்கள் பேசுவதைக் காண நலம் விரும்பிகள் மனம் பதறும். ஜனநாயகம் பேசப்படும் இந்த நாட்களிலே இப்படி 'எனது' 'நான்' என்று எவராவது பேசினுல் மக்கள் மனது எப்படியிருக்கும்? மக்கள் ஆட்சிக்குப்பதில் மமதை நிரம்பிய 'மன்னன்' ஆட்சி முறை ஏற்படுவதையா விரும்புவர்! பசுக்கூட்டம், புலி வருவதையா வரவேற்கும்! பொதுஜன ஆட்சிக்குப்பதில் "நான்" போடும் தனியொருவன் வசமா, செங்கோலைத் தருவர்! ஒருக்காலும் ஒப்பார்—எவரும இசையார். அதிலும் மமதை நிரம்பியோரை ஒழித்து, பொதுஜன ஆட்சி ஏற்படுவதற்காக் உடம்பையும் உள்ளத்தையும் புண்ணக்கிக் கொண்டவரா ஒப்புவர்!

* * *

'ஜனநாயகத்தின் விலை!' என்று தலைப்பிட்டு, 'மெயில்' இதழ், கடந்த வாரம் டில்லியில் ஆரம்பமாகியிருக்கும் முதல் இந்திய பார்லிமெண்டு குறித்து, செய்தியொன்று தந்துள்ளது. நாள் ஒன்றுக்கு 30,000 ரூபாய், செலவழியுமாம்! பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கும், அவர்தம் வசதிகளுக்கும்!! இதைத்தான், 'ஜனநாயகத்தின் விலை' என்று குறிப்பிடுகிறது, 'மெயில்'. ஜனநாயக முறையின்படி, மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், அதற்கான செலவை மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்வதும், இந்த ஜனநாயக முறையால் தமக்கு நல்வாழ்வும் சுக ஆட்சியும்கிடைக்குமென்பதால்தான். இதனுலேயே தமது பிரதிநிதிகளுக்கு ஏற்படும் செலவை மக்கள் தமது வரிப்பணத்

(11-ம் பக்கம் பார்க்க)

# காதல்

"சுந்தரரூபா!"

"இதய வல்லி"

"ஏற்பரோ உமது மதத்தவர்?"

"கவலையில்லை, கண்மணி"

"வாய்த் துடுக்கினால் வதைப்பரே!"

"உன் வனப்பினால் என்னை நீ வசீகரிக்கிறாயே"

"அதோ—அப்பா வருகிறார்"

"வந்து பார்க்கட்டுமே நமக்குள் ஜோடிப்பொருத்தம் இருப்பதை"

* * *

கன்னியனுப்பும்
புதுப்பார்வை—அவன்
கட்டுடல் மீதிலும்
தோளினிலும்—சென்று
மின்னலின் மீண்டது!
கட்டழகன்—தந்த
விண்ணப்பம் ஒப்பினள்
—புன்னகையால்!

* * *

திருமணத் தேதி குறிக்கப்பட்டுவிட்டது! தேன்குடித்த வண்டாயினர் இருவரும்! மணமகன் சாதாரணமானவனல்ல, அழகன்; அந்தஸ்துள்ளவன்! மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி! ஆகவே, திருமண ஏற்பாடுகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன. தித்திக்கும் இவ்விழாவில் கலந்துகொள்ள அதிகாரிகளும் அறிஞர்களும் தயாராயினர். 'கலப்புமணம்' பற்றிப் பாராட்டி, பலரது, வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. மணமகனும் மணமகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகின்றனர். இளமலர்கள்! காதல் மணம் பெற்ற மலர்கள்!! கண்களும் இதயமும் குளிர்ந்து நிற்கும் நேரம். 'ரிஜிஸ்டர்' ஆகவேண்டியதுதான் பாக்கி. பிறகு இருவரும் ஒரே கம்பின் இரண்டு புஷ்பங்களாகிவிடுவர்! சதிபதிகள்தான், பிறகு!! இன்பக்கனா, கண்டு கொண்டிருக்கும் இந்த நேரத்தில், ஆவேசமாக ஒருவர் ஓடிவருகிறார் — 'ஐயோ!' என்று அலறுகிறார். திடுக்கிடுகின்றனர் மணமக்கள். "திருடா உன் ஜம்பம் பலிக்காது. விடடா என் பெண்ணை" என்று அலறுகிறார். மணமகளின் விழியிலே நீர்! மணமகனின் கண்களிலே கனல்!!

# சிந்தும்

வீதியிற் பற் பல
வீணர்களும் வேறு
விதியற்ற சிற்சில
பண்டிதரும் —வந்து
சாதியிலுன்னை
விலக்கிடுவோம்—உன்
தந்தையின் மதிப்பையும்
நீ இழப்பாய்! நம்
ஆதி வழக்கத்தை
மீறுகின்றாய்!!"

இவ்விதம், எழுப்பிய, எதிர்ப்புகளையெல்லாம் தூசுகளாக மதித்தத்தான், அந்த சுந்தரமலர்கள் இரண்டும், ஜோடிகளாக, முடிவு செய்தது.

"மதம், எங்கள் மன உறுதியை மாற்றமுடியாதப்பா!" என்றாள், தந்தையிடம் வாதாடியபோது.

"மதத்தைவிட்டுத்தானே விலக்குவீர்கள்—பரவாயில்லை. உங்கள் மதத்தைவிட என் மணாளனின் மார்பே எனக்குப் பெரிது!" என்றாள் வீதி வீணர்கள் வந்துமிரட்டியபோது. அவ்வளவு உறுதியுடன் புது விழா மனையில் அமர்ந்திருந்த அவர்களிடம் வந்து அலறினார், மணமகளின் தந்தை. மணமக்கள், விழித்தனர் ஒருவர்க்கொருவர். "முடியாதப்பா!" என்றாள், மகள். 'இவளே என் இதயராணி' என்றான் அவன். 'ஆனால், சட்டத்தால் உமது கொட்டம் அடக்குவேன் தெரியுமா?' என்று கர்ஜித்தார், கானத்தைக் கலைத்த காடி! நீட்டினார் நீதிபதியின் உத்திரவை. மிரண்டான் மணமகன். இழுத்துச் சென்றார் பெண்ணை!!

* * *

'எங்கே, நடந்தது, இந்த நாடகம்' என்று கேட்பீர்கள். நாடகமல்ல, இது! நடைபெற்ற சம்பவம்!! கடந்த சனியன்று டில்லிமாநகரிலே நிகழ்ந்தது இது. குமாரி ராஜ்சர்மா எனும் கொவ்வை இதழாள், டில்லிராஜ்ய முதல் மந்திரியின் அந்தரங்க காரியதரிசியான சிகந்தர்பகத் எனும் குமரனுக்கு மாலையிட இருந்தாள். 'மதம்' எனும் மந்தி, காதல் மலர்களை, கசக்கிவிட்டது. மணமகள் இந்து மதமாம்! மணமகன் முஸ்லீமாம்!! பொறுக்குமா வைதீகம்? மதப்புலி சீறியிருக்கிறது. பெண்ணின் தந்தை, கோர்ட்டின் உதவியை

# கண்ணீர்!

நாடி, தற்காலீக 'இன்சக்ஷன்' பெற்று தடுத்துவிட்டார் திருமணத்தை—'மகளுக்கு வயது 21 ஆகவில்லையென்று சொல்லி. மணத் தம்பதிகள் பிரிக்கப்பட்டனர். காதல் புறாக்களின் சிறகுகள் கத்தரிக்கப்பட்டுவிட்டன — காதகரால்! நீதிபதியின் 'தற்காலிகத் தடையுத்தரவு, பெறப்பட்டுவிட்டது—பெண்ணின் தந்தையால். ஆனால் இது அவரோடு போய்விடவில்லை! அவருக்கு பக்கபலமாக வைதீகக் கும்பல் வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்திருக்கின்றன. 'இஞ்சக்ஷன்' ஆர்டர் பெறுமுன்பு என்னென்ன கோலாகலம் நடைபெற்றதாம் தெரியுமா? டில்லி சர்க்காரின் அறிக்கை கூறுகிறது, கேளுங்கள்:

கோர்ட்டுக்குள் 500 பேர் புகுந்தனர்.

"திருமணத்தைத்தடு" என்று முழக்கமிட்டனர்.

கூச்சல்! கலாட்டா!!

கண்ணாடி ஜன்னல்களெல்லாம் தூள்! தூள்!!

காட்டுமிராண்டித்தனமாக நடந்தனர்.

நீதிபதி 'தடையுத்திரவு' தந்த பின்னரே, அமளி அடங்கிற்று—

பலருக்கு கத்திக்குத்து.

இருவருக்கு மரண நிலை

9 பேருக்கு படுகாயம்

இவ்வளவும் எதற்கு? முஸ்லிம் மத மணமகன், இந்துப் பெண்ணை மணப்பதற்கு. ஆத்திரமும் கோபமும் பெண்ணின் தந்தையோடு போய்விடவில்லை—வைதீக இந்துக்களின் வெறியையெல்லாம் கிளப்பியிருக்கிறது. வைதீக இந்துக்கள் என்றால் முப்புரி நூலும், வேத பாராயணமும், தர்ப்பையும், ஏந்திய சனாதனப் பிம்பங்களுக்கு மட்டுமல்ல! சட்டசபை உறுப்பினர்களுக்கு? யாரிந்த சட்டசபையினர் தெரியுமா? இந்துமகாசபைக்காரர்கள், காதல் ஜோடிகளைத் [illegible]

பொதுஜன ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்! ஆர்ப்பாட்டமா? அல்ல! அல்ல!! பெரியதொரு கிளர்ச்சி. அந்த கிளர்ச்சியின் விபரம் வேண்டுமா?

டில்லி மந்திரிதாக்கப்பட்டார்

பார்லிமெண்டு மேல்சபை உறுப்பினரை கூட்டத்தார் உதைத்தனர்

காயம் அவருக்கு.

கார் சேதமடைந்தது

உயிர்தப்பியது, அபூர்வம்

எப்படியிருக்கிறது, பாருங்கள்! காதல் கீதம் தடுக்க இத்தனை பெரிய கலவரம்—காரணம் 'மதம்'. மந்திரியாரை தாக்கியிருக்கிறார்கள்—சனாதனிகள். அவர்களின் கலவரம் அதோடு போய்விடவில்லை. இத்திருமண ஏற்பட்டால் உருவாகியிருக்கும் கலவர நிலையை சமாளிக்க முடியவில்லையாம் — டில்லி ராஜ்ய சர்க்காருக்கு. எனவே,

144 போட்டிருக்கிறார்கள்.

கூட்டங்கள் கூடாதென்று தடுத்திருக்கிறார்கள்.

ஊர்வலம் நடத்தக் கூடாது.

ஐவருக்கு மேல் கூடக் கூடாது.

ஆயுதமணிந்த போலீசார் ரோந்து வருகிறார்கள்.

சாதாரணத்திருமணம். "கண்ணே நீயும் நானும் ஒருடலானோம். எனவே கைகோர்த்துச் செல்வோம் வாழ்க்கையில்" என்று, இரு இளம் இதயங்கள் செய்து கொண்ட முடிவை, அறுக்க, இவ்வளவு பெரிய கலவரம்! மந்திரி மீது படையெடுப்பு — சர்க்காரே கலங்கக் கூடிய நிலை, 32 பேர் கைது— இந்து மகா சபைத் தலைவர்கள் கைது — பார்லிமெண்டு இ. ம. உறுப்பினர் கைது. எவ்வளவு வெட்கக் கேடு இது! இத்திருமணத்தைத் தடுக்க, பாராளுமன்றத்திலமர்ந்திருக்கும் 'பக்குவம்' பெற்றோரும், முழு மூச்சோடு ஒத்துழைக்கிறார்கள். என்ன காரணம் இதற்கு? மற்றோர் மதஸ்தன் தமது மதத்தில் பெண் கொள்ளக் கூடாதாம்! காதலித்து, அணைத்து மகிழ்ந்து, ஆரத் தழுவி முத்தம் கொடுத்து, வாழ்க்கைப் பாதையில் செல்ல இரண்டு உருவங்களுக்கு உரிமை இல்லை. மதபீடம்—காதலை முறிக்கிறது! வைதீகக் கோடரி பாய்கிறது! சனாதனக் கழுகு கொத்துகிறது! அதுவும் எவ்விதம்? கோர்ட்டிலே புகுந்து நீதிபதியை மிரட்டி! மந்திரியைத் தாக்கி! ஊரையே நிலை கலக்கி! இந்த விபரீத நடவடிக்கையில் ஈடுபடுவோர் யார்? எதுவுமறியாத பாமரரா? அல்ல. அல்ல. படித்து பட்டம் பெற்றவர்கள் — பாராள வந்திருப்பவர்கள்; அவர்களால் இந்தக் கலப்பைப் பொறுக்க முடியவில்லை. 'லைலா—மஜனு' கதையை அறிந்தவர் உண்டு. 'ரோமியோ ஜூலியட்'டை வியந்து படித்து பட்டம் பெற்றோர் உண்டு. 'சாகுந்தலம்' கண்டு போற்றும் சமஸ்கிருத பண்டிதர்கள், அவர்கள் ஆனால், இந்தக் காதலைத் துண்டிக்கிறார்கள். அதுவும் எப்போது? மாபெரும் சாம்ராஜ்யத்தையே மங்கைக்காக இழந்த விண்ட்ஸர் கோமகன் வாழ்கின்ற இந்த நூற்றாண்டில்! கண்டிக்கும் தமது உறவினரையெல்லாம் துச்சமெனத் தள்ளி, 'கருப்பர்தான் ஆனாலும் என் கண்ணாளர்' என்று காதல் கீதம் பாடும் வெள்ளை நிறச் சீமாட்டி ரூத் வில்லியமும் அவரது ஆப்ரிக்க கணவன் — அரசன் — சேரட்ஸி காமாவின் சம்பவம் நடைபெறும் நூற்றாண்டில்! மதம் மாய்க்கிறது—காதலை. வைதீகம் மறுக்கிறது — உரிமையை. மணமக்கள் இருவரும் மனிதர்தாம்! அங்க அவலட்சணமில்லை, மணமகன், முஸ்லீம் என்பதால். 'எல்லோரையும் போலத்தான் இருக்கிறான் — இன்னுஞ் சொன்னால் சராசரி மனிதர்களைவிட அதிக சம்பாத்தியம்தான் பெறுகிறான். அந்தஸ்துள்ளவன்— மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி— அழகன். எனினும் மதம், தடுக்கிறது, அவனை மணாளனாகக் கொள்ளாதே என்று. 'மதம்' எந்த உருவில்? மகாவிஷ்ணுவின் சக்கராயுதமாகவோ, மகேசனின் சூலாயுதமாகவோ வந்து அல்ல! வைதீகர்கள் மூலம்!! எவ்வளவு விசித்திரம் இது? காதலை மாய்க்கிறது கட்டுப்பாடு! "அப்பா! அணிமணி தந்தீர்—படிக்க வைத்தீர் — பலர் மெச்சவளர்த்தீர். கண்ணே என்றீர். கண்மணியே என்று அழைத்தீர். காலில் முள் குத்தினால் கண்ணில் பட்டது போலக் கலங்கினீர். நான் துயரப்பட்டால் துடித்தீர். 'என் சுகமே' பெரிதென்றீர். இன்று என் ஆசையைப் பொசுக்குகிறீர்களே! வாழ்க்கையை ஒடிக்கிறீர்களே, அப்பா. இது நியாயமா அப்பா?" என்று கலங்கும் மகளின் கண்ணீரைக் கண்டும் இதயமிளகா மனம், அந்த மணமகளின் தந்தைக்கு ஏற்படச் செய்திருக்கிறது, மதம். மனித நிலையிலிருந்தும் அவரை விரட்டியோட்டியிருக்கிறது, மதம். 'தன் மகளின் வாழ்க்கையைவிட சனாதனம் கெடக்கூடாது' என்று கூறத் தூண்டுகிறது, அவரை. அவரோடு போய்விடவில்லை இது! ஆயிரக்கணக்கானோர் பதைக்கின்றனர். 'அடுக்குமா?' என்று அங்கலாய்க்கின்றனர். துடிக்கின்றனர்! தோள் தட்டுகின்றனர்! 'விடுவோமா இதை?' என்று வீறுப்பு பேசுகின்றனர். விந்தையிதை எங்கே காண முடியும்? அறிவு வளர்ச்சிப் பெருகுவதாக ஆர்ப்பரிக்கும் தோழர்களே, காதலைத் தீய்க்கிறதே கண்மூடி வழக்கம், கண்டீர்களா? மதம்! மதம்!!—இது, மக்களின் கண்களைக் கொத்துகிறது. உள்ளத் துடிப்பை உணராமற் செய்கிறது. கேவலம் இதுவென்பீர்! வெட்கம் என்பீர்! விசித்திரம் என்று நொந்து கொள்வீர்! இந்த வேதனையை ஒழித்தால் தான் முன்னேற முடியும் என முழக்குவீர்!

ஆனால் என்ன நடைபெறுகிறது? காதல் கண்ணீர் வடிக்கிறது! பருவ மலர் அழுகிறாள்! வாலிபன் சித்திரவதை செய்யப்படுகிறான்—"மதம்" பாய்கிறது. "தர்மானுசாரம் போவதா?" என்போர், கொதிக்கிறார்கள். இத்தகைய 'மதம்' தான் போற்றிக் காக்கப்பட வேண்டுமாம்—புனிதர் 'ஆச்சாரியார்' போதிக்கிறார். "தர்மானுசாரம் நிலைநாட்டப்பட வேண்டுமாம்." — கூறுகிறார், கோவையில், ராஜகோபாலாச்சாரியார். நினைத்துப் பாருங்கள்! வாடி வதங்கும் அந்த இரு இள இதயங்களை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்! வாழ்க்கையைத் துண்டிக்கும் மதம்! வெறி பிடித்த புலி! வேண்டுமா? ஆதரித்து வளர்க்கத்தான் வேண்டுமா? புராதன சம்பிரதாயத்தை வளர்க்கத்தான் வேண்டுமா? — பொசுக்குகிறதே மனிதர்களை! வாழப் பிறந்தவர்கள்—வாழ்வின் வசந்த காலத்தில் நிற்பவர்கள்—இன்பங் காணத் துடிக்கும் மணமக்கள்—அவர்களைப் பிரிகிறதய்யா பிரிக்கிறது! 'மதம்' பிரிக்கிறது' கொக்கரித்துக்கொண்டு செய்கிறது, இப்பணியை. என்ன விந்தை! எவ்வளவு கோரம்!!

# "ஜகஜ் ஜோதி!"

"வைகுண்டம் போகிறேன்!"

"வேண்டாம் பிரதர் வைகுண்டம் வரண்டுகிடக்குதாம். கைலாசம் போகலாம் — கனஜோராயிருந்துட்டுவரலாம்"

"வைகுண்டத்தைவிட கைலாசம் ஒசத்தியோ?"

"தெரியாதா சேதி! கைலாசம் இன்னும் வரண்டுவிடவில்லை — வைகுண்டம்தான் சுடுகாடாகஇருக்குது. கைலாசம் போனபோதும். ஆகாயமும் பூமியும் அந்தரமாச் சுற்றும்! 'ஜெகஜ்ஜோதி'யிருக்குதப்பா, அங்கே!!"

"அப்படியா?........வைகுண்டத்தின் வசதிகள் கைலாசத்தில் உண்டோ!"

"ஆட், பாட, அருமையாககாலம் கழிக்க அதுதானப்பா ஏற்ற இடம். கேட்டதில்லையா, நீ, வைகுண்டத்தைப் பற்றி?!!"

"ஆல்ரைட்! நீ சொல்றபடியே, செய்றேன். அதுசரி. வைகுண்டத்துக்கும் கைலாசத்துக்கும் ரொம்ப தூரம் இருக்குமோ?"

"அதுதான் இல்லை! நடுவிலே ஒரு ஆறு. அவ்வளவுதான். இக்கரையிலே வைகுண்டம்! அக்கரையிலே கைலாசம்!!"

"வைகுண்டத்துக்கும் கைலாசத்துக்கும் போய்வர, வசதி?"

"படகு இருக்கும், பார்த்துக் கொள்ளலாம்"

"அப்ப, சரி! நாம்ப கைலாசத்துலே 'ரூம்' வச்சுக்குவோம். குடும்பத்தை 'வைகுண்டத்திலே' தங்கச் சொல்லுவோம்"

"ஓ! பேஷா!!"

"சரி. டிக்கட் 'புக்' பண்ணிடச் சொல்லீயா உடனே செய். இங்கே வெயில் உயிரைக் கொல்றது—அங்கேயாவது போய் இருந்துட்டுவரலாம்"

* * *

திகைத்துப்போனேன் நான்! ஆனால் அந்த இரு தோழர்களும்—தோழர்களா? அல்ல! அல்ல!! கனதனவான்கள்— ஒருவருக்கொருவர் விடைபெற்றுக்கொண்டு போயினர்.

பஸ்ஸ்டாண்டில் நடைபெற்ற சம்பவம் இது. அந்த இருவரும் யாரோ எனக்குத் தெரியாது — ஆனால் சுகமாக வாழ்க்கையைக் கழிக்கும் ஒய்யார புருஷர்கள் என்று மட்டும் விளங்கியது—தோற்றத்தின் மூலம். அவர்கள் இவ்விதம் வைகுண்டத்தையும் கைலாசத்தையும் ஏதோ அவர்கள், 'ரெஸ்ட் ஹவுஸ்' மாதிரி பேசுகிறார்களே, என்னும் எண்ணத்தால், திகைத்தேன்.

"இளமையான வாலிபர்கள். இவர்களுக்கேன் இந்த விரக்திவந்திருக்கிறது. கைலாசத்தையும் வைகுண்டத்தையும் நாடுகிறார்கள்?"

"கைலாசமும் வைகுண்டமும் போவதென்ன அவ்வளவு எளிதா? தபோதனர்களும் மகாமுனிவர்களும், அறுபதனாயிரம் எழுபதனாயிரம் ஆண்டுகள் என்று அகோர தவம் செய்தும் அத்தனிப்பேறு அடைவது கடினம் என்று புராண இதிகாசங்கள் சொல்லுகின்றனவே"

"சேச்சே! இவர்களைப் பார்த்தால் நாகரீகமானவர்கள் என்று தெரிகிறது. இவர்களாவது, கைலாசத்தையும் வைகுண்டத்தையும் நம்புவதாவது?"

"டிக்கட் 'புக்' பண்ணு என்று சொன்னாரே!"

"கேலியாக இருக்கும் — நாம் கூறுவதில்லையா 'என்னஐயா! அய்யரிடம் அரையணு கொடுத்தா 'மோட்சலோக'டிக்கட் ஆயிடுமோ என்று? அதுபோல கிண்டலாகப் பேசிக்கொண்டிருந்திருப்பார்கள்."

"ஆகாயம் பூமியும் சுற்றும்! 'ஜகஜ்ஜோதியைக் காணலாம்' என்றார்களே!"

இவ்வித கேள்விகள், என் மனதில், கூத்தாடலாயின. வைகுண்டமும் கைலாசமும்!—சாதாரண விஷயமா இது? ஆகவே, பக்கத்திலிருந்த ஒருவரிடம் கேட்டேன். "இப்போது இங்கே பேசிக்கொண்டிருந்தார்களே அவர்கள் இருவரும் யார்?"

"அவர்களா?" என்று கேட்டுவிட்டு, என்னைச் சிறிது பார்த்தார். பிறகு ஏதோ, ஐயம் கொண்டோர் போல, "ஏன்?" என்றார்.

"கைலாசம், வைகுண்டம் என்று பேசிக் கொண்டார்களே — அதனால்..."

"அதனால் என்ன?"

"ஏதாவது வாழ்க்கையில் விரக்தியோ, என்று நினைத்தேன்"

"விரக்தி உனக்கும் எனக்கும் தான். அவர்கள் இந்த ஊரிலேயே பெரிய செல்வவான்கள்......"

'வைகுண்டத்துக்குப் போவதா கைலாயத்துக்குப் போவதா என்று பேசிக்கொண்டார்களே?"

அவர் சிறிது என்னை முறைத்துப் பார்த்தார். "நீர் — பத்திரிக்கைப் படிப்பதுண்டா?" என்றார். "உண்டு என்றேன் நான்" "பிறகேன் அவர்கள் பேசிக் கொண்டதைப் பற்றி இப்படிக் கேள்விமேல் கேள்வி போடுகிறீர்" என்றார். அப்போது தான் விஷயம் விளங்கிற்று! 'அது தானே பார்த்தேன்' என்று கூறிக்கொண்டே இடி இடியெனச் சிரித்தேன். அவர், எரிச்சலோடு, என்னைப் பார்த்தார். "புரிஞ்சதுங்க!" என்று கூறினேன். எனக்கோர் திருப்தி ஆனால், அவர் என்னை விடவில்லை.

"ஏன்யா சிரித்தீர்?"

"சிரிக்காமல் பிறகென்ன செய்வது! 'வைகுண்டம்' 'கைலாசம்' பற்றி கதையளப்போரின் வார்த்தைகள், இவ்வளவுதூரம், நமது மக்களின் கேலிக்கு ஆளாகியிருப்பதை அறிந்து, சந்தோஷப் படாமலா இருக்க முடியும்?"

"யார் கதையளப்போர்—அதற்காக நீர் ஏன் சிரிப்பது?"

(8-ம் பக்கம் பார்க்க)

**எமது புது வெளியீடு**

கிரேக்க பேரறிஞர்

**பிளேட்டோ**

ஆசிரியர்: கௌதமன்

விலை ரூ 1—0—0

விற்பனையாளருக்கு 25% கழிவு
தபால் செலவு இனம்.

தனிப் பிரதி தேவைக்கு 1—0—0
M. O. மூலம் அனுப்பவும்

கிடைக்குமிடம்:—

**மின்னொளிப் பதிப்பகம்**
31 பீட், சென்னை 1.

திராவிடநாடு

காஞ்சி] 1—6—52 [ஞாயிறு

# விரயம்

டில்லி சட்டசபையிலே, கடந்த வாரம் இரயில்வே பட்ஜெட்டும், பொது பட்ஜட்டும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன—காங்கிரஸ் ஆட்சியாளரால்.

"ஏழைகளின் நன்மைகளுக்காக எதுவும் இல்லை!" என்று, பார்லிமெண்டு உறுப்பினர்கள் பலர் கண்டித்திருக்கின்றனர்.

பாதுகாப்பு என்ற பெயரால் பாதிப்பணம் செலவழிக்கப்படும் காங்கிரஸ் சர்க்காரால் மக்களின் நன்மைகளுக்காக, எவ்வித வசதியும் அதிகரிக்கப்படவில்லை. மாறாக, மாகாணங்களுக்கு தந்து வந்த உணவு 'மான்யத்தொகை'யும் இனி கிடையாதாம்.

'பட்ஜட்டை' விளக்கிப் பேசிய நிதி அமைச்சர் தேஷ்முக், 'வரி அதிமாகாமலிருப்பதற்காக', மக்கள் மகிழ்ச்சி அடையவேண்டும் என்று கூறியிருக்கிறார். பார்லிமெண்டில் பேசிய பண்டிதநேருவோ, 'எமது நோக்கம் நாட்டைச் சிர்படுத்தி மக்களுக்கான குறைகளைப்போக்குவது தான்' என்று, வழக்கம்போல், தீப்பொறி பறக்கப் பேசியிருக்கிறார்.

இரயில்வேயில் மூன்றாம் வகுப்பு மக்களுக்காக எவ்வித வசதியுமில்லை—'டிக்கெட்' குறைப்பும் இல்லை.

அதேபோல, டில்லி சர்க்காரின் புது வரவுசெலவு திட்டப்படி, மக்களுக்கான கல்வி, சுகாதாரம், ஏழ்மை ஆகியவைகளுக்குப் பரிகாரமும் இல்லை—வரி விகிதங்களில் குறைப்புமில்லை—மாகாணங்களுக்கு வேண்டிய பண உதவிகளும் இல்லை.

"இது ஏன்?" என்று கேட்ட எதிர்க்கட்சித் தோழர்களுக்கு, பற்பல விதமான காரணங்களும், 'பணம் இல்லையே!' என்கிற பல்லவியும் பாடப்பட்டிருக்கிறது. அதிக வரி! சேமிப்புப் பணமும் காலி! மக்களுக்கும் வசதிகள் இல்லை!—ஆனால் 'பணமும் இல்லையாம்'!!

எங்கே போகிறதுபணம்?—இதுபற்றி பார்லிமெண்டிலே சிலர்வெளியிட்டருசிகரமான தகவல்களைத்தர விரும்புகிறோம்.

குன்ஸ்ரூ: ஒழுங்கான திட்டம் இல்லை. இதனால் தாமோதர் நதிபள்ளத்தாக்கு போன்றவைகளுக்கு, திட்டமிட்டதற்கு மேல் பணம் செலவழிக்கப்படுகிறது. அதிகவிலை கொடுத்து வெளிநாட்டுக்கம்பெனிகளிடமிருந்து வெடிகுண்டுகள்வாங்குவதேன்? அக்கம்பெனிகள் நம்மை ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றனவே! பெல்ஜியம் போன்ற இடங்களில் இந்த வெடிகுண்டுகள், நல்லதாகவும் மலிவாகவும் கிடைக்கும்போது, பிரான்சில் வாங்கக் காரணம் என்ன? லண்டனிலிருக்கும் ஹைகமிஷனருக்கு இதில் என்ன சம்பந்தம்?

பி. ராத்: ஹிராகுத் அணைக்கட்டுக்கு போட்ட திட்டத்தை விட அதிகப் பணம் செலவாவதேன்? அதிகாரிகளுக்கும் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் இந்த 'அணைக்கட்டுத்திட்டங்கள்', பொன் காய்க்கும் மரங்களா?

அம்பேத்கார்: நடுநிலைமை வகிப்பதாகப் பெருமை பேசும் சர்க்கார் ராணுவத்துக்கென வருமானத்தில் பாதிப்பங்கை செலவழிப்பது ஏன்? சேமிப்பு நிதியையும் கரைத்துக் கொண்டிருக்கும் சர்க்கார் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறது?

* * *

'வரிப்பணம், விரயம் ஆகிவரும் விஷயங்கள் குறித்து, அடிக்கடி நாம் குறிப்பிட்டு வந்துள்ளோம். இருந்தும் இன்னும் மாதா மாதம் இதுபோன்ற விரயங்கள் அதிகமாகிக் கொண்டே உள்ளன. இவ்விதம் மக்கள் பணத்தைச் சீர்கேடாக்கும் 'மத்ய சர்க்கார்', ஏழை மக்களின் நல்வாழ்வுக்கென எவ்வித பணமும் ஒதுக்கவில்லை. நாட்டில் வேலை திண்டாட்டம்—கல்வியில்லாமை – ஏழ்மை – தாண்டவமாடுகிறது. இதுபற்றி எவ்வித உடனடித் திட்டங்களும் வகுக்கவில்லை. ஆனால், பணம் மட்டும் கரியாகிக் கொண்டிருக்கிறது! வெளி நாடுகளிலிருக்கும் இந்தியத் தூதுவர்களின் இஷ்டம்போல் மக்களின் வரிப்பணம் விரயமாகிறது!!

இது குறித்து, இவ்வளவு புகார்கள் வந்தும், விசாரணை செய்ய முன்வரவில்லை, நேரு சர்க்கார். ஆனால் வேதனை மட்டும் கொள்கிறார். அதுவும் யார் மீது? வெளி நாடுகளுக்குச் செல்லும் இந்தியர், தனது ஆட்சியைப் பற்றிப்புகழ்ந்து பேசுவதில்லையாம்; இகழ்ந்து பேசுகிறார்களாம்—இதைக குறிப்பிட்டு வேதனைப் படுகிறார். போவோர் கூறியா தெரிந்து கொள்ளவேண்டும்? ஆங்காங்கே இருக்கும் தூதுவர்களின் செய்கைகளேபோதுமே! இவ்வளவு அவலட்சணத்திலிருக்கும் டில்லி, எதற்கெடுத்தாலும் 'ஐந்து வருஷத் திட்டங்கள்' என்று கூறிக்கொண்டு, அதற்கு அமெரிக்கா பணம் தரும்' என்று பேசிய வண்ணம் இருக்கிறது.

* * *

இந்த ஆண்டு பட்ஜெட்டைப் பார்த்தால், மாகாணங்களிலிருந்து செல்லும் வரி இனங்கள், டில்லி கஜானாவுக்கு அதிகப் பணம் குவிப்பதை அறியலாம். மாகாணங்கள் அதிகப்பணம் தருகின்றன! ஆனால், அவைகளுக்குத்தரும் 'மான்யமோ' ரத்து செய்யப்படுகிறது!!

ஊழல்—விரயம்—துரோகம். இதுதான் டில்லியின் நிர்வாகம். இதை எத்தனை நாட்களுக்குத்தான் நாம் சுமப்பதோ?

## "இமயம்"

ஆசிரியர்: எஸ். எஸ். மாரிசாமி.

'காண்டீபம்' இதழின் ஆசிரியராகயிருந்து பணியாற்றிய நண்பர் எஸ். எஸ். மாரிசாமி அவர்கள் துவக்கியிருக்கும் 'இமயம்' இதழ் வரப்பெற்றோம். வாசகர்களின் மனதைக் கவரக்கூடிய பல பகுதிகள் உள்ளன. விலை அணா 3. முகவரி: நிர்வாகி "இமயம்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை 3.

# குரங்காட்டம் பாரீர்

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த, குடியேற்றத்தில், சென்ற ஆண்டு வள்ளுவர் நூல் நிலையம் நடத்துவதற்காக தோழர் கே. ஆர். ராமசாமி அவர்கள் நடிக்கும் 'ஓர் இரவு' நாடகம். தி. மு. கழக சார்பில் நடத்தினார்கள். அப்பொழுது நாடகங்களுக்கு வரி உண்டு. நூல் நிலையத்திற்காக நிதி நாடகம் என்று காட்டி, வரி விலக்கு பெற்றார்கள். ஆனால் இப்பொழுது ஏதேதோகாரணங்காட்டி, வரி கட்டச்சொல்லி தொல்லை தருகிறார்கள் ஆட்சியாளர்கள். தோழர்கள் எங்கே செல்வார்கள்? எல்லாம் நூல்களாகவும், நூல்நிலையச் சாமான்களாகவும் மாறியிருக்கின்றன. ஆட்சியாளர் குரங்காட்டம் ஆடுகிறார்கள். அதற்கு இது அருமையான உதாரணம்! ஆனால், வரி கட்ட இயலவில்லையென்று, நிலைமையை விளக்கி, குடியேற்றம் தி. மு. க. செயலாளர் கு. கி. பொன்சாமி அறிக்கை வெளியிட்டுள்ளதைக் கீழே காணுங்கள். மக்கள் மன்றத்திற்கு வழக்கு வந்துவிட்டது. பொதுமக்களே, தீர்ப்பளியுங்கள்!

## பொதுமக்களே ! தீர்ப்பளியுங்கள் !!

15—3—51ல் வள்ளுவர் நூல் நிலைய உதவி நிதி—நாடகம் - ஓர் இரவு—நடத்த நாடக வரிக்கு விதிவிலக்கு அளிக்கும்படி குடியேற்றம் விற்பனைவரி அதிகாரிக்கு மனு போட்டோம்.

16—3—51ல் குடியேற்ற விற்பனைவரி அதிகாரி M E. T. E 2/51 உத்திரவுபடி வரிவிலக்கு அளித்தார்.

25—3—51ல் ஓர் இரவு நாடகம் நடைபெற்றது.

19—5—51ல் குடியேற்றம் கிளை ஆபீசிலிருந்து டை. 16—3—51ல் அளிக்கப்பட்ட வரிவிலக்கு அரசாங்கத்தாரலேயே முறை தவறி அளிக்கப்பட்டதின் காரணமாக செல்லுபடியாகாதென்றும் வரிவிலக்கு தரப்பட்ட ரூ 384–10—0ம் உடனடியாகக் கட்டப்படவேண்டும் என்ற உத்திரவு பிறந்தது.

5—6—51ல் R. C 136/51 படி வடஆற்காடு மாவட்ட விற்பனைவரி அதிகாரியின் ரூ. 384–10–0ம் கட்டப்படவேண்டும் என்ற உத்திரவு.

12—6—51ல் தி. மு. க. காரியதரிசி அவர்களால்குடியேற்றம் கிளை அதிகாரிக்கு (1) வட ஆற்காடு மாவட்ட அதிகாரிக்கு (2) அப்பீல் மனுக்கள்.

அப்பீல் மனு வாசகச் சுருக்கம்: 16—3—52ல் வரிவிலக்கு அளிக்கப்பட்டதால்தான் நாடகம் நடத்தப்பட்டது இல்லையெனில் நடந்திராது. மேலும் செலவினங்களும், நூல்நிலைய ஏற்பாடுகளும் அரசாங்க சட்டதிட்டங்கட்குட்பட்டு செய்திருப்பதாலும், வந்த பணம் பூராவும் நூல் நிலையத்திற்குச் செலவழிந்துவிட்டதாலும், மீதி ஒரு செல்லாக் காசும் இல்லாததால் 16—3—51ல் தந்த வரிவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

11—8—51ல் மீண்டும் எங்கள் 12—6—51ல் போடப்பட்ட மனுவைக் கிஞ்சித்தும் ஏறெடுத்துப் பார்க்காமல் குடியேற்ற விற்பனைவரி அதிகாரி ரூ 384–10–0ஐயும் கட்டிவிடும்படி உத்திரவு

10—9—51ல் காரியதரிசிக்கு மேல்படி கிளை ஆபிசிலிருந்து நேரில் வரும்படி சம்மன்.

15—9—51ல், குடியேற்றம் அதிகாரிக்கு 25—9—51ல் வடஆற்காடு மாவட்ட அதிகாரிக்கு முறையே அப்பீல் மனுக்கள்.

11—11—51ல் வடஆற்காடு மாவட்ட அதிகாரியிடமிருந்து 15—9—51லும் 25—9-51லும் செய்யப்பட்ட அப்பீல் மனுக்கள் காலதாமதத்தில் செய்யப்பட்டதால் செல்லாது என்றும். உடனே ரூ 384–10–0ம் கட்டப்படவேண்டுமென்றும் உத்திரவு. ஆனால் 12—6—51ல் காரியதரிசி அவர்களால் காலா காலத்திலேயே செய்யப்பட்ட மனுவைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை.

14–11–51ல் எங்கள் 12–6–51, 15—9—51, 25—9—51. மனுக்களைச் சாப்பிட்டுவிட்டு, குடியேற்றம் கிளை ஆபீசிலிருந்து, காரியதரிசிக்கு உண்மையில் அப்பீல் செய்வதாயிருந்தால் ரூ. 384—10—0 கட்டுவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க (Stay-Order) வாங்கும்படி உத்திரவு போட்டு திணறடித்தது.

(Personal Hearing) நேரில் குறைதெரிவிக்க காரியதரிசி அவர்களால் வேலூர் மாவட்ட அதிகாரிக்கு அனுமதி மனு அனுப்பி மறுக்கப்படவே நம் ஊர் வாசியும் வேலூர் நகரில் சட்டநிபுணர் துறையில் அரிமா எனத்திலங்கும் உயர்திருவாளர். C V. சதாசிவம் B. A.. B. L அவர்கள் ஊதியம் ஏதும் பெறாமல் மனமுவந்து வாதாடினார்கள்.

அன்னாருக்கு பொதுமக்கள் சார்பில் என்றும் குன்றா நன்றி!

27–1–52ல் நேரில் குறை தெரிவிக்க அனுமதி.

21–2–52ல் மீண்டும் வேலூர் நகரில் நம் ரிகார்டுகளைப் பரிசீலனை செய்தப்பிறகும். சாமான்கள் வாங்கியதற்கான ரசீதுகள் நேரில் காட்டப்படவேண்டும் என்ற மாவட்ட அதிகாரியின் உத்திரவு.

27–2–52, 4–3–52, 12–4–52ல் வேலூரில் தக்க ரசீதுகளுடனும் உள்ளூர் பிரமுகர்களால் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களால் அளிக்கப்பட்ட உறுதிமொழி பத்திரத்தையும் காட்டி விளக்கியும்,

14–4–52ல் Roc. 224/51 படி ரூ. 384–10–0ம் கட்டப்படவேண்டும் என்ற வேலூர் மாவட்ட அதிகாரியிடமிருந்து உத்திரவு.

மேற்கண்ட உத்திரவை பார்க்கும் போது 16–3–51ல் வரிவிலக்கு அளிக்கப்படுவதேன்? 19–5–51ல் பணம் பூராவும் நூல் நிலையமாகக் காட்சியளிக்கின்றது. ஒருசெல்லாக்

காசும் கிடையாது என்று தக்க சான்றுகளுடனும், ரிகார்டுகளுடனும், உள்ளூர் பிரமுகர்கள் M.A.V. துரைசாமி, முனிசிபல் கவுன்சிலர். V. ராமசாமி, முனிசிபல் கவுன்சிலர் K. முத்துசாமி நகர வரிகொடுப்போர் கழகத் தலைவர் மற்றும் சிலர் கூடியபரிசீலனைக்கமிட்டியின்உறுதி மொழி பத்திரத்தைக் காட்டி வழக்கறிஞரைக்கொண்டு நாங்கள் ஆதி முதல் அந்தம் வரை அரசாங்க சட்டதிட்டங்கட்குட்பட்டே செய்துள்ளோம் என்பதை நிரூபித்துங் கூட, இந்த ராமராச்சிய ஆளவந்தார் ஆட்சியில் ரூ. 384–10–0ம் கட்டும்படி உத்திரவு பிறப்பிப்பது நீதியா? முறையா? நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

தி. மு. க. சார்பில் நாடகம் நடைபெற்றது—நூல் நிலையம் தோற்றுவிக்கப் பட்டது அதை அனுமதிக்கக்கூடாது என்று யாரோ இன எதிரிகள் விஷமம் செய்தால் அரசாங்க அறுவலகத்தாரும் முன் பின் யோசிக்காமல் பணம் கட்டு, என்று உத்திரவு அம்புகளால் துளைத்தால் ஒருகாசும் மிதமில்லா நிலையில் தி. மு.க. காரியதரிசி எங்ஙனம் கட்டுவார்? நிலத்தீர்வை கட்டத்தவறினல் வசூல் செய்ய என்ன முறை கையாளப் படுகிறதோ அம்முறையே கையாளப்பட்டு ரூ. 384–10–0ம் வசூலிக்கப்படும் என்ற அரசாங்க எச்சரிக்கை வரப்பெற்றுள்ளோம். நாங்களும் ஆளவந்தாருக்குப் பதி ) எச்சரிகை விடுகிறோம்.

ஏ அரசாங்கமே! நாடக வசூல் அனைத்தும் புத்தக உருவிலே, பொது மக்கள் பலருக்கு போதிய அறிவை பயக்கிற வண்ணமிருக்கிறது. இந்நிலையில் நீ மிரட்டுகிறாய். சுதந்திரம் வந்ததாகக்கூறிக்கொள்ளும் இந்த நாட்டிலே பேசுவதற்கு தடை, எழுதுவதற்கு தடை, நாடகத்திற்கு 144, நூல் நிலையத்திற்கு மூடுவிழா. இம்மாதிரி பலவகையில் அறிவை குறைப்பதற்கென்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறாய். ஆனல், பொதுமக்களின் உரிமை புகை உங்களை கவ்விக்கொள்ளும் நாள் தொலைவில் இல்லை என்று துண்டறிக்கை !வெளியிடப்பட்டுள்ளது.

❀

5-ம் பக்கத் தொடர்ச்சி

"பத்திரிகையில் வந்த சேதிகளைக் கொண்டுதானே அவர்களிருவரும் பேசிக் கொண்டார்கள்"

"ஆமாம்!"

"கோவையில் ஆச்சாரியார் பேசியிருக்கிறாரே—அதைப்பற்றித் தானே வைகுண்டத்தையும் கைலாயத்தையும் கேலி செய்தார்கள்"

அவருடைய கண்களில், ஒருவித கோபப்பார்வை படர்வதைக் கண்டேன்.

"என்ன ஐயா பேசினர் ஆச்சாரியார்? "

"மாரியம்மனைக் கும்பிடுங்கள்—தர்மம் தழைக்கப் பாடுபடுங்கள், பக்தி மார்க்கம் பெருகவேண்டும். நான் தொடுத்திருக்கும் போர், இவைகளை நம்பாதவர்கள் மீதுதான் — இப்படியெல்லாம் பேசியிருக்கிறாரே. டத்திரிகைகளில் கொட்டை கொட்டையாகப் போட்டிருக்கிறார்களே! அதைப்பற்றித்தானே அவர்கள் கிண்டலாகப் பேசிக் கொண்டார்கள்"

"போய்யா! பத்திரிகையிலே பெரிய தலைப்பிட்டு வரும் சேதியைப் படிப்பதோடு சரிபோலும் நீர். அவன்க, என்னமோ, பிரமாதப் படுத்தறான்க. அவரும் வாய்க்கு வந்தபடியெல்லாம் கொட்டறாரு. நீர் என்னமோ அதை பிரமாதமா நினைக்கிறீர்? யார் ஐய்யா கவலைப் படறாங்க இப்ப அதைப் பத்தியெல்லாம்..."

"சி. ஆர். பேச்சை, நீங்கள், படிக்கலீயா?"

"படிக்கிறது வேற—கவலைப் படறது வேறு. ஏதோ, அந்த மனுஷன், பேசித் திரியறாரு—விஷமத்தோடே செய்யறாரு. அதைப் பற்றி நமக்கென்ன? ஆகாய விமானம் இருக்கிற காலத்திலே புஷ்பக விமானக் கதையையா கேட்க முடியும்!"

"அவர் செய்ற விஷமத்தை இப்படியே விடறதா?"

"விடாமே! துள்ளுகின்ற கிழமாட்டை அதன் போக்கிலே விட்டா, கொஞ்ச நேரத்திலே, அடங்கிட்டுப் போவுது. சம்பங்கித் தோட்டத்திலே 'சாக்கடையின் மணம்' குறித்துப் பேசினா யார் தான் நம்புவா? முன்னேறும் உலகை இவர்தானா முட்டுக்கட்டையிட்டுத் தடுத்துவிட முடியும். சும்மா 'கப்சா' விடறாரு..."

"அப்படின்னா அவர் பேச்சைக் குறித்துப் பேசலீயா, அவர்களிருவரும்"

"நீர்தான் ரொம்ப கவலைப் படறீர்—அவர்கள் பேசிக்கொண்டது வேறு விஷயம். பக்தி மார்க்கம் அல்ல—எப்படி சுகமா இந்த வெயில் காலத்தைக் கழிக்கலாம் என்பது!"

"வெயிலுக்கும் வைகுண்டத்துக்கும்?"

"துங்கபத்திரா நதி இல்லே."

"ஆமாம்! இருக்கு. அங்கே ஒரு கரையிலே வைகுண்டம் இருக்கு—அடுத்த கரையிலே கைலாயம்னு ஒரு 'ரெஸ்ட்' ஹவுஸ் இருக்கு"

"ஆமய்யா, ஆமாம்! கோடையில் குளு குளுவென்று இருக்குமாம்—அங்கே போவதைப் பத்தித்தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்"

"கைலாசம்போனா 'ஜகஜ்ஜோதி'யைக் காணலாம் என்றார்களே?"

"ஓ! அதுவா? துங்கபத்ராவின் அடுத்த கரையிலே இருப்பது ஐதராபாத் சமஸ்தானமல்லவா?"

"ஆமாம்!"

"அங்கேயிருப்பது கைலாயம்—இந்தக் கரை சென்னை மாகாணம். இங்கே இருக்கும் உல்லாச வீட்டின் பெயர் வைகுண்டம். ஐதராபாத்திலே மதுவிலக்கு உண்டோ?"

"கிடையாது மது கிடைக்கும்"

"அதுதான் 'ஜகஜ்ஜோதி'—புரியுதா? எதிருக்கெதிரே வைகண்டமும் கைலாசமும் இருக்குதாம்!

கைலாசத்திலிருப்போரைப் பார்க்க வைகுண்டத்திலிருப்பவர்கள் வயிறு எரிகிறதாம். "பூப் போட்ட கிளாசிலே போடய்யா ஒண்ணறை!"—இது, கைலாசத்தில். 'ஆரஞ்சு ரசமா—தக்காளி சூப்பா'—இது வைகுண்டத்தில். வைகுண்ட வாசிகள், அக்கரையிலிருப்போரின் சுகம் கண்டு பொறாமைப் படுகிறார்களாம். 'வைகுண்ட வாசம்' சொந்தக்காரரும் வருந்துகிறாராம்—வருமானம் குறைகிறதாம்! வருவோர்—நேராக 'கைலாசம்' போய் விடுவதால்! போட்டி சொர்க்கம் போல — வைகுண்டமும் கைலாசமும் இருக்கிறதாக பி. டி. ஐ. நிருபர், எழுதியிருக்கிறார்"

❀

# மறைந்த மஜீத்

நெல்லிக்குப்பத்தின் நெடு வீதிகளையெல்லாம் தாண்டி, சின்னஞ் சிறு சந்துக்குள்ளே புகுந்து அழைத்துச் சென்றார்கள். அந்த சந்து, சாக்கடையும், சகதியும் இரண்டு பக்கங்களிலும் புடைசூழ, காட்சியளித்தது! அந்த சந்தைத் தாண்டியவுடன், சிறு மைதானம். அதில் நாலைந்து சிறு கூரை வீடுகள். அதிலே, கூரையும் சிதைந்த ஒரு குடிசை வீடு. அதன் முன்னால் போய் நின்றோம்.

தோழர்கள், வீட்டிலிருப்போர்களை அழைத்தார்கள்.

வயதான கிழவி வெளியில் வந்தார்கள். அக்கம் பக்கம் ஓடி ஈச்சம் பாய்களை வாங்கிவந்து, சுத சுதவென நீரோதம் நிரம்பிக் கிடந்த தரையின் மீது விரித்தார்கள். எங்கோ ஒரு வீட்டிலிருந்த் கயிற்றுக் கட்டிலை இழுத்து வந்து போட்டார்கள்.

பக்கத்து வீட்டிலிருந்தவர்கள் விரைந்து சென்று, சிறுவனொருவனை அழைத்து வந்து நிறுத்தினார்கள்.

மஜீத் குடும்பத்தை நேரில் காணச் சென்றவர்கள் கண்ணீருடன் தான் திரும்ப முடியும்.

அவர்கள் குடும்பம், ஏழ்மைக்கு இலக்கியம்! வறுமைக்கு உதாரணம்!!

மஜீத் தந்தை வயதானவர்—வாழ்வின் அந்தி நேரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்.

ஷேக் பாபு என்று கூறினால் அந்த ஊர் மக்களுக்கு நன்குத் தெரியும். ஏனெனில் அவர் தொழில் கலாய் பூசுதல். ஆகவே, அந்த ஊரில் எந்த வீட்டுப் பாத்திரமும், அவரது கையால் ஈயம் பூசப்படாமலிருக்க முடியாது. அவர் தெருக் கோடிகளில் துருத்திக்கு இடம் அமைத்து, தொழில் தொடங்கும் பொழுதெல்லாம். துணை புரிவாள், அவர் மனைவி தாவுத்தம்மாள்.

இந்த இருவர் பெற்றெடுத்த வரோ ஒன்பது பேர். ஐந்து குழந்தைகள், இளமையிலேயே இறந்து விட்டன.

மிகுதி நால்வரில் மூத்த சகோதரிக்கு திருமணம் முடிந்துவிட்டது. இளைய சகோதரி ஜீனத் பாய், தம்பி அப்துல் கரீம் இருக்கிறார்கள், மறைந்த மஜீதுக்கு.

பழுத்த இலைகளும், பசுமை நிறைந்த துளிர்களும்தான் மிச்சம் இவைகளைக் காப்பாற்றும் பொறுப்பிலே இருந்த மஜீத் மறைந்து விட்டான்.

மஜீத், குள்ள உருவமானாலும், கொள்கையிலே, மிக உயரம். திராவிட கழகத்திலே பணியாற்றிய பொழுதும், பிரிந்து முன்னேற்றக் கழகம் அமைத்த பொழுதும் மஜீத்தின் தொண்டு, நல்ல முறையில் பயனளித்தது.

அண்மையிலே வந்து போன தேர்தலில், காங்கிரசுக்கு எதிராக இருந்து பணியாற்றினான். தெருத் தெருவாக சென்று, ஊழல் மலிந்த காங்கிரசின் கேடுகளை மக்களுக்கு எடுத்துரைத்தான்.

தென்னாற்காடு மாவட்டம், இந்தத் தேர்தலால், இந்தியாவிற்கே ஒரு அபாய அறிவிப்பாக அல்லவா மாறிவிட்டது.

இந்த மாவட்டம், நேருவுக்கு நெஞ்சிலே நடுக்கத்தை தந்துவிட்டது.

இந்த மாவட்டம், வடநாட்டு முதலாளிமார்களுக்கு எச்சரிக்கையல்லவா, விட்டது, கோயங்காவை விரட்டியடித்தது மூலம்.

இந்த மாவட்டம், காங்கிரசுக்கே சாவுமணியடித்து விட்டது.

இதற்கு மஜீத் போன்றவர்களின் தொண்டுதானே காரணம் என்று கண்ட. ஒரு காங்கிரஸ் வெறியன், காரணனன்.

கண்ணன் என்ற பெயருடைய பாதகன் 24—1—52 அன்று இரவு 10-30 மணிக்கு, ஆலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த மஜீதை, கத்தி கொண்டு தாக்கினான். கொலை செய்து விட்டோடினான்.

வழக்கு பதிவாகி நடந்து வருகிறது. இதோடு நான்கைந்து வாய்தாக்கள் போட்டு விட்டார்கள்.

கண்களை இழந்துவிட்டதுபோல், தடுமாறுகிறார்கள், மஜீதின் குடும்பத்தினர்.

தந்தைக்கு தள்ளாத வயது — எந்த வேலையும் செய்துபிழைக்கும் பருவம் கடந்துவிட்டவர்.

தாயும் அப்படியே—என்னசெய்ய யும்? பிஞ்சுக் குழந்தைகள்தான், மற்ற இரண்டுபேரும்.

தம்பி ரகிமை, ஆலையில் சேர்த்துக்கொள்ளும்படிக் கேட்டால் வயதாகவில்லையென்று திரும்பியனுப்புகிறார்கள்.

அன்றாட வாழ்க்கைக்கே, அலைமோதுகிறார்கள்.

இந்த ஏழைக்குடும்பத்தின் நிலையைக்கண்டு, கொள்கைக்காக உயிர் விட்ட ஒரு வீரனின் குடும்பம் இப்படித் தவிக்கப் பார்த்திருப்பது சரியல்லவென்று ஒரு நிதிதராஞ்டிவு செய்து, நிதியும்சேர்ந்துவருகிறது.

நெல்லிக்குப்பத்திலேயே, ஒரு நிதிக் கமிட்டி அமைத்தார்கள்—ஆரம்பத்தில். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் சி. என். ஏ. அவர்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதால், அவர்கள் தாங்கள் சேர்த்துள்ளதொகையை காஞ்சிக்கு அனுப்பிவிடுவதாக அறிவித்துள்ளார்கள்.

அந்தக் குடும்பம், நம் உதவியைத் தினந் தினம் எதிர்பார்க்கிறது. மஜீத் மாணத்திற்குப்பிறகு, இன்றுவரை, நகர தி. மு. க. உதவியால் தான் குடும்பம் நடைபெற்று வருகிறது. ஆகவேதான் நிதி முயற்சியை விரைவில் முடிக்கவேண்டும்.

அந்த மாவட்டத்தில், காங்கிரசுக்கு எதிர்ப்பாக நின்ற எம். எல். ஏக்கள் மனம் வைத்து, இந்தஏழை குடும்பத்திற்கு உதவி செய்திருக்க வேண்டும். ஒருவர், இருவர் உதவியிருந்தாலும், எல்லோரும் செய்ய வேண்டும்.

மற்றும் கழகத்தோழர்கள், விரைவில் நிதி உதவி, தவிக்கும் குடும்பத்திற்கு ஆறுதல் கூறவேண்டும்.

தோழர்களே, நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்; நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் என்றஅடியையினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

## மஜீத் நிதி விவரம்

| | |
|---|---|
| முன் வரவு | 663—1—10 |
| ஆ. சுப்பையா | 2—0—0 |
| சுப. முத்து வேல் | 1—0—0 |
| பொ. ரெங்கசாமி | 1—0—0 |
| சுப. ஆறுமுகம் | 1—0—0 |
| சோ. பொன்னப்பா | 1—0—0 |
| செ. ராமசாமி | 1—0—0 |
| ந. கருப்பையா | 1—0—0 |
| பொ. கிருட்டினன் | 1—0—0 |
| சொ. சுப்பிரமணியன் | 1—0—0 |
| சு. அ. மோகன் | 1—0—0 |
| க. வேலாயுதம் | 1—0—0 |
| ராம. சிலையப்பன் | 1—0—0 |
| ராம. நாராயணன் | 1—0—0 |
| கு. ம. சொக்கலிங்கம் | 1—0—0 |
| புதியம்புத்தூர் எம். துரை பாண்டியன் | 0—8—0 |
| பட்டுக்கோட்டை ஏ. டி. எம். சிவகங்கை | 1—0—0 |
| ஜலகண்டாபுரம் ஸ்டூடன்ஸ் வாலிபால் கிளப் தோழர்கள் | 5—4—0 |
| காவனூர் புருஷோத்தம் | 0—8—0 |
| ராமசந்திராபுரம் பி. நாராயணன் | 1—0—0 |
| பெரியமங்கலம் முகம்மது | 0—8—0 |
| சைதாப்பேட்டை ஆர். சகுந்தலா | 1—0—0 |
| மீர்சாபேட்டை, வள்ளுவர் இலவச வாசகசாலை மூலம் | 10—0—0 |
| கடையநல்லூர் தி. மு. க. | 6—2—0 |
| பட்டிவீரன்பட்டி தி. மு க. | 9—4—0 |
| குடந்தை தி. மு. க. | 6—0—0 |
| கம்பம் தி. மு. க. | 35—0—0 |
| திருவாங்கூரைச் சேர்ந்த வண்டிப் பெரியார் வசூல் | 34—0—0 |
| பாப்பனூர் வசூல் | 11—0—0 |
| எம். அஹ்யா | 0—4—0 |
| எம். அப்துல்கரீம் | 0—8—0 |
| எம். முஹம்மதுஜவுபர் | 0—4—0 |
| கே. சுல்தான் | 0—4—0 |
| எச். ஏ. அஜீஸ் | 0—2—0 |
| எம். செவத் | 0—8—0 |
| எம். அப்துல்கபூர் | 0—2—0 |
| எம். ஏ. ஜப்பார் | 0—2—0 |
| கே ஜாஹிர் | 0—4—0 |
| மு. க. முஸ்தாபா | 0—2—0 |
| எஸ். கெய்னு | 0—2—0 |
| எம். செய்யது | 0—2—0 |
| எம். அஹமது | 0—3—0 |
| எம். முஹம்மதுசயீது | 0—4—0 |
| எம். அப்துல்காதர் | 0—2—0 |
| எஸ். செல்லா | 0—2—0 |
| ஓ. வகாப் | 0—2—0 |
| எச். முகம்மதுசாலிஹ் | 0—2—0 |
| எச். சயீது | 0—4—0 |
| கே. நத்தர்சா | 0—2—0 |
| இ. சுல்தான் | 0—2—0 |
| என். டி. எம். கனி | 0—2—0 |
| ஜே. எம். அஹமதுஷரீபு | 0—2—0 |
| ஏ, ஜக்கிரியர் | 0—2—0 |
| எஸ். அப்துல்ஹமீது | 0—2—0 |
| ஜே. காதர்பாட்சா | 0—4—0 |
| ஆர். அப்துல்லெத்திபு | 0—4—0 |
| எம். இஸ்மாயில் | 0—4—0 |
| எஸ். யாகூபு | 0—3—0 |
| கே. தாஹிது | 0—4—0 |
| ஒய். சுபுஹான் | 0—2—0 |
| பி. என். கிருஷ்ணசாமி | 1—0—0 |
| ஆர். கல்யாணசுந்தரம் | 1—0—0 |
| கோடி | 1—0—0 |
| வாசுதேவன் | 1—0—0 |
| லக்குமணன் | 1—0—0 |
| ராமானுஜம் | 1—0—0 |
| நடராஜன் | 1—0—0 |
| நடேசன் | 1—0—0 |
| வெங்கிடுசாமி (ஏஜெண்ட் திராவிடநாடு) | 1—0—0 |
| வெங்கிடுசாமி மூலம் | 1—8—0 |
| சௌந்திரபாண்டியன் | 0—8—0 |
| மாரி | 0—8—0 |
| இராமசாமி | 0—8—0 |
| வீரப்பன் டி. எம். | 0—4—0 |
| நம்மாள்வார் | 0—8—0 |
| வி. எஸ். மணி | 0—4—0 |
| பி. கே. நடராஜன் | 0—8—0 |
| எஸ். முத்து | 0—8—0 |
| டி. எஸ். எஸ். என். | 0—4—0 |
| மந்திரிகருப்பன் | 0—4—0 |
| து. மா. பெரியசாமி | 0—8—0 |
| முருகூர் ஆர். தொரசாமி | 0—4—0 |
| துரையூர்டி.என்.அப்பாஜி | 0—8—0 |
| கோவிலூர் எஸ். விஸ்வநாதன் | 0—4—0 |
| கொழும்பு கே. நடராசன் | 5—0—0 |
| சென்னை ராசகோபாலன் | 3—0—0 |
| சென்னிமலை தி. மு. க. | 5—0—0 |
| தாதாபுரம் தியாகராயர் படிப்பகம் | 1—0—0 |
| சங்கரமல்லூர் ராமசாமி | 0—8—0 |
| ,, எம். விநாயகம் | 1—0—0 |
| ,, தி. க. ராமலிங்கம் | 0—4—0 |
| ,, வி. ஏ. நடராசன் | 0—4—0 |
| சங்கரநயினார்கோவில் தி. மு. க. செயலாளர் மூலம் | 5—2—0 |
| சென்னை பாரதிதாசன் நூல் நிலையத்தார் | 5—9—0 |
| திண்டுக்கல் டி.நாராயணன் | 3—0—0 |
| மொத்தம் வரவு ரூ. | 851—2—10 |

## தஞ்சை மாவட்ட பிரச்சார பயிற்சி வகுப்பு

தஞ்சை மாவட்ட பிரச்சார பயிற்சி வகுப்பு 1952 ஜூன் திங்கள் 12, 13, 14, 15 நாட்களில் கும்பகோணம் டவுனை அடுத்துள்ள தேப்பெருமா கல்லூரில் (திருநாகேஸ்வரம் ரயில் நிலையத்துக்குப் பக்கத்தில்) நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, பெரு நிலக்கிழார் அவர்கள் தங்கள் பங்களாவில் நடத்தித்தர முன்வந்துள்ளார்கள்.

பிரச்சார பயிற்சி வகுப்பைத் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., என். எஸ். இங்கோ ஆகியோர் நடத்திவைப்பார்கள். பயிற்சி வகுப்பில் தஞ்சை மாவட்டத்தினர் மட்டுமே கலந்துகொள்ளவேண்டும் மாணவர்களுக்கு மட்டுமே வகுப்பில் சேர்ந்துகொள்ள முதன்மையும் முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் முன்பே மேடை ஏறிப்பேசிப் பழக்கப்பட்டவராகவும் பயிற்சி மட்டுமே பெறவேண்டியவராகவும் இருக்க வேண்டும்.

வகுப்பில் சேர விரும்புவோர் அவர் பேச்சாளர் என்பதற்கு அந்தந்த ஊர்க் கிளைக் கழகத்தின் முத்திரையும் கிளைக் கழக செயலாளரின் கையொப்பமும் வாங்கி விண்ணப்பத்தாள்களை கே. கே. நீலமேகம் செயலாளர் மாவட்ட தி. மு. கழகம் பஞ்சுக்காரத் தெரு, கும்பகோணம் என்ற முகவரிக்கு 5—6—52-க்குள் அனுப்பிவைக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே பதில் வரையப்படும் அழைப்பு பெற்றவர்களே வகுப்புக்கு வரவேண்டும்.

போக்குவரத்து வழிச் செலவுகள் பயிற்சி பெறுவோரைச் சார்ந்தவை ஒவ்வொருவரும் சொந்தப் படுக்கையுடன் வரவேண்டும்.

இடவசதி சாப்பாடுவசதி மட்டும் செய்து தரப்படும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

தின் மூலம் தருகின்றனர்—'கஜானு'விலிருந்து எடுத்துக்கொடுக்க அனுமதிக்கின்றனர்.

"நான்" கூடாது — "நாம்" வேண்டும் என்பதற்காக; "சர்வாதிகாரம்" இல்லாத "ஜனநாயக" ஆட்சி நடைபெறவேண்டும் என்கிற ஆசைக்காக; இவ்வளவு செலவையும் ஏற்றுக்கொள்கிறது, மக்கள் மன்றம்.

தினசரி ரூ 30,000! அகில இந்தியப் பார்லிமெண்டுக்கு!! இந்த சபையிலேதான், இந்திய ஜனாதிபதி ராசேந்திரபிரசாத், கடந்த 16ந் தேதி பிரசங்கம் செய்திருக்கிறார்—அவரது பேச்சில் அடிக்கடி தொனித்த குரல் நம்மைத் திடுக்கிடச் செய்தது. ராசேந்திரர், சக்ரவர்த்தியல்ல; நாம் அறிவோம்—நல்லவர் என்று கூறப்படுவர். சர்வாதிகாரியும் அல்ல! ஆனாலும், பழைய பாணியிலேயே, அவரது பிரசங்கத்தில் வார்த்தைகள் வந்து விழுந்திருக்கின்றன—அல்ல! அல்ல!! ஜனாதிபதியின் பிரசங்கம் கவனத்தோடு தயார் செய்யப் படுமாம் — ஆகவே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்திய பார்லிமெண்டு ஜனநாயகப் பிரதிநிதிகள் அடங்கிய கூடம் என்று சொலலப்படுகிறது—அதற்காக நாளொன்றுக்கு 'முப்பதினாயிரம்' செலவிடப்படுகிறது. அங்கே பேசுகிறார்—ராசேந்திரபிரசாத் அல்ல—ஜனாதிபதி. எவ்விதம்? "என்னுடைய சர்க்கார்" (My Government) இங்கிலாந்தில் இவ்விதம் பேசப்பட்டால் ஐயம்கிளம்பாது எவருக்கும்! ஆனால் இங்கே பேசப்படுகிறது — குடியரசு எனக் கூறப்படும் இங்கே "நான்" என்கிற தொனிஎழும்புகிறது. "இதிலென்ன குற்றமாம்? அவருடைய காங்கிரஸ் சர்க்கார்தானே ஆள்வது!" என்று சிலர் கேட்கவிரும்பலாம். உண்மை! ஆள்வது அவரது காங்கிரஸ் சர்க்காராகவேயிருக்கட்டும். அதனால் என்ன? ஏனிந்த அவசியம் வந்தது, 'என்னுடைய' என்று குறிப்பிட! அதைவிட அருமையான சொல் இல்லையா? கவுரமான வார்த்தை இருக்கிறதே—அவரே சில சமயங்களில் கூறியிருக்கிறாரே—Our Government என்று! "நம்முடைய"—"என்னுடைய" இரண்டு வார்த்தைகளுக்கும் இடையே இருக்கும் வித்யாசம் இலேசா என்ன? மககள் சர்க்கார்—தனிமனிதன் சர்க்கார். இரண்டையும் பிரித்துக் காட்டுவதுதானே 'எனது' 'நமது' என்னும் வர்த்தைகள். ஏனிதை விட்டுவிட்டு 'என்னுடைய' என்று குறிப்பிடவேண்டும் அவர். ராசேந்திரர் மன்னனல்ல; மமதை நிரம்பிய சர்வாதிகாரியுமல்ல; பின், ஏன், 'எனது' வந்தது? 'நமது' வரவில்லை! என்ன காரணம் இதற்கு?

ராசேந்திரபிரசாத் மட்டுமல்ல, அவரது ஆசனத்தில் அமரும் எவரும் இப்படித்தான் பேசுவர். 'முப்பது கோடிமக்களின் ஏக தலைவர்' என்கிற, முழக்கம்தான், இந்திய ஜனாதிபதியாகவரும் எவரது, பேச்சிலும் காணமுடியும். அத்தகைய ஆட்சிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது காங்கிரஸ் மூலவர்களால்! ஜனநாயகப் போர்வையில் 'சர்வாதிகாரம்' பவனி வரும் முறை!! அமெரிக்காவிலும் பிரசிடெண்ட் உண்டு—அவர் மக்கள் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், அளவிலாத அதிகாரங்கள் உடையவர். அப்படியில்லை, இங்கு! மக்கள் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவரல்ல இந்திய ஜனாதிபதி. மறைமுகமாக வருபவர். மந்திரி சபையால் கவுரவம் பெறுபவர். இவர் பேசுகிறார், 'எனது' என்று! என்ன பொருள் இதற்கு? எப்படியேற்பட்டது இந்தத் துணிவு? எங்கிருந்து வந்தது, இவ்வளவு தைரியம்?

காங்கிரஸ் மூலவர்கள் வகுத்திருக்கும் அரசியல் முறைதான், இத் துணிவையும் உரிமையையும் தந்திருக்கிறது.

முப்பது கோடி மக்களின் முடிசூடா மன்னனாகயிருக்கும் வகையில் வடநாட்டவர் வகுத்திருக்கும் அரசியல் முறைதான், 'எனது' என உரிமை கொண்டாடச் சொல்கிறது.

எல்லா மகாணங்களும் அவரது பேனா முனையிலே கிடக்கின்றன.

எல்லா மக்களும் அவரது 'டில்லி'க்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்திய உபகண்டம் ஒரே நாடு எனும், விசித்திரத்தை ஸ்தாபிக்கச் செய்துகொண்ட, வேதனையான அரசியல் முறைதான், இது.

இந்த அரசியல் முறை, இப்போது ஆளத் துவங்கிவிட்டது.

இந்த அரசியல் முறையை நாம் மட்டுமல்ல, பற்பலர் கண்டித்தே வந்துள்ளனர். எனினும், இன்று, செங்கோலை ஏந்தத் துவங்கிவிட்டது.

இந்த அரசியல் முறையை வகுத்துக் கொண்டோம் என்கிற துணிவால்தான், 'டில்லி' கம்பீரமாகப் பேசுகிறது — 'நான் கூறுகிறேன்' என்று, மாகாணங்களைப் பார்த்துப் பேசுகிறார், பண்டித நேரு.

நீண்டு பரந்து கிடக்கும் இம்மாபெரும் உபகண்டமே தமது எனும் தருக்கு, டில்லி மூலவர்களுக்கு, தரப்பட்டிருக்கிறது.

முப்பது கோடி மக்கள்! பற்பல இனம்! பற்பல மாகாணங்கள்! — இதைஆட்டிப்படைக்க 'ஒருஇடம்'.

* * *

இவ்வளவு தருக்கும், இத்துணை பெரிய உபகண்டத்தை 'தமது' என உரிமை கொண்டாடும் வழியும் தரும் வகையில் வடநாட்டு மூலவர்கள் வகுத்துக்கொண்ட அரசு முறையின் ஆடம்பரம் இருக்கிறதே—அது, பசுத்தோல் போர்த்திய புலிபோன்றதாகும்! ஜனநாயகம் பற்றிப் பேசவில்லை ஹிட்லர்! முசோலினியும் 'ஜனநாயகம்' குறித்து கவலைப்படவில்லை! ஆனால், இங்கே, 'ஜனநாயகம்' பற்றிப்பேசிய வண்ணமே 'ஹிட்லரும் முசோலினியும்' உருவாகுகிறார்கள்!! அவர்கள் 'மாபெரும் சாம்ராஜ்யம்' என மனக் கனவோடு உலவினர்—உறுமினர். இவர்களும் 'அகண்ட இந்துஸ்தான்' எனும் ஆசையோடு உலவுகின்றனர்— உறுமுகின்றனர்.

பலப்பல மாகாணங்கள் அடங்கியதாகவுள்ள தேசங்கள், உலகில் இல்லாமலில்லை. ஆனால் அந்தத் தேசங்கள் தமக்கு வகுத்துக் கொண்டிருக்கும் அரசியல் முறைக்கும், வடநாட்டு மூலவர்கள் இந்த மாபெரும் உபகண்டத்துக்கு வகுத்துக் கொண்டிருக்கும் அரசியல் முறைக்குமுள்ள தாரதம்யத்தைப் பார்த்தால், டில்லியின் சூது மதி விளங்கும்.

Federal
Unitary—என்று இரண்டு வகை உண்டு, அரசு முறைகளில். பல பிரதேசங்கள், இந்த அரசு முறைகளின் மூலம், ஒன்றாகச் சேர்க்கப்பட்டு ஆட்சி நடைபெறுவதாகும். இந்த இரு முறைகளில்:

**பெடரேஷன்:** பல மாகாணங்கள் அல்லது ராஜ்யங்கள் அடங்கிய தாகும். ஆனால் இதிலிருக்கும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு. வெளி நாட்டு விவகாரம் போன்ற சில பொதுப் பிரச்னைகளின் அதிகாரம் மட்டும் பெடரேஷன் சர்க்கார் வசம் இருக்கும். மத்யசர்க்கார் பலம்பொருந்தியதாக இருக்காது — நேசமுள்ளதாக காட்சி அளிக்கும். தனது செல்வாக்கு மூலம் மாகாணங்களின் உரிமைகளை மத்யசர்க்கார் பறித்துவிட முடியாது.

யூனியன்: பல மாகாணங்கள் அல்லது நாடுகள் சேர்க்கப்பட்ட ஒரு 'ஐக்கிய' முறை இது. இங்கே, மாகாணங்களைவிட மத்யசர்க்காரே பலம் பொருந்தியதாக இருக்கும். எல்லா நாடுகளும், தமது அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டதாகவே மத்யசர்க்கார் கருதும்.

இரண்டுவித அரசு முறைகளில், வடநாட்டு மூலவர்கள், எதை தமதாக்கிக் கொண்டுள்ளனர் என்பதை, உலகம் உணரும். 'பெடரல்' —கூட்டாட்சி முறைக்கு பூகோள ரீதியும், இன ரீதியும் வேற்றுமையில்லாமலிருக்கவேண்டுமாம்! இங்கே இதைக் காட்ட முடியுமா? எத்தனை இனங்கள்! எவ்வளவு வேறுபாடுகள்!!—இருந்தும் "இந்திய யூனியன்" என்று, கூறுகிறார்கள். 'தனது' சர்க்கார் என்று பரந்த உபகண்டத்தைக் காட்டுகிறார்கள், உலகுக்கு! எவ்வளவு சூது மதி இது? ஏனிந்த கோழைத்தனமும் குறும்புச் செயலும் இருக்க வேண்டும்? என்ன காரணம் இதற்கு தமது அதிகாரம், என்று காட்டிக்கொள்ளும் 'சர்வாதிகார வெறியைத் தவிர?

ஆஸ்திரேலியா, பெடரல் அமைப்புகொண்ட நாடு. அங்கே இப்போது மாகாணங்களுக்கும் மத்திய சர்க்காருக்குமிடையே ஒரு தகராறு வளர்ந்திருக்கிறது. மாகாணங்களுக்கு அந்தக் 'காமன்வெல்தில்' நிறைய உரிமையும் சலுகையும் உண்டு! எனினும் மாகாணங்கள், பெடரல் சர்க்காரை எதிர்த்துத்தோள் தட்டுகின்றன. 'ஏனிந்த அமைப்பு' என்றுகூட கேட்கின்றனராம். பெடரல் சர்க்கார், தமது நிதிநிலையைச் சரிவரக் கவனித்து உதவவில்லையென்பதே, ஆஸ்திரேலியா மாகாணங்களின் கிளர்ச்சியாகும். 'உதவாத கூட்டாட்சி—ஏன்?' என்று உரத்து முழக்கமிடுகின்றனர்.

பெடரல் அமைப்பு கொண்ட அங்கே இந்த 'முழக்கம்' எழும்பத் துவங்கும்போது, மாகாணங்களின் தலையில கைவைத்தவண்ணமே இருக்கும் இந்திய 'யூனியனில்' எத்தனை நாளைக்குத்தான் டில்லியின் தர்பாரும் 'ஒரே ஆட்சியும், நான் என்ற மமதையும் நீடிக்க முடியும்? இப்போதே மாகாணங்கள் கேட்கவில்லையா — கோபாலர் (மாஜி அமைச்சர்) குமுறவில்லையா-பலர் கண்டிக்கவில்லையா 'டில்லியின்' போக்கை. மாகாணங்களின் 'குரல் வளை'யை இறுகப்பிடிக்க, டில்லி, ஆயத்தம் செய்யச் செய்ய இந்த உரிமைக்குரல் இங்கே எழும்பத்தான் துவங்கும் — இன்று துதிபாடும் காங்கிரஸ் தலைவர்களே இதைஎழுப்புவர் இந்த உண்மையை உணராமல் டில்லி, கொக்கரிக்கிறது! 'நாம் எல்லாம் ஒன்றன்றோ?' என்று பல்லவி பாடுகிறதல்லவா டில்லி அங்கே நடந்த சம்பவத்தைக் கேளுங்கள். கடந்த 20ந்தேதி — டில்லி பார்லிமெண்டிலே பேசிய பஞ்சாபி ராவ் தேஷ்முக் எனும் மத்திய பிரதேச காங்கிரஸ்காரர் தென்னாட்டவரைப் பார்த்து கேலி செய்தாராம்! எவ்விதம்? ஆபிரிக மலான் கூறுகிறானல்லவா நிறத்தைக் காட்டி—. அதைப் போல! 'எதிர்கட்சியில் வாதாடும் உறுப்பினர்களின் நிறம் நன்றாக இல்லை' என்றாராம். உடனே ஒரு தென்னிந்தியப் பிரதிநிதி எழுந்து,

அவரைக்கண்டித்திருக்கிறார். ஆ
ரிகமலான், வடநாட்டில்! நிறத்தை
காட்டி பரிகசிக்கிறார்கள்!—ஆனா
"இந்தியா ஓர் நாடன்றோ" என்
பாடுகிறார்கள். தென்னிந்தியப்பிர
நிதிகளைப் பழிப்பது தென்னிந்தி
பூமியை அன்றோ பரிகசிப்பதாகும்
அவ்வளவு திமிரும் மமதையு
வளர்ந்து கிடக்கிறது—வடநாட்
வர்களுக்கு! இதை, எத்தனை
நாளைக்கு, எவர்தான் சகித்து
கிடக்க முடியும்! அதிகாரத்தா
அலறிய, மன்னாதிமன்னர்களையு
சர்வாதிகாரிகளையும் கண்டிருக்
றோம் — சரிதத்தில். இப்போ
இங்கே அவர்கள் கையாண்டுவிழு
"நான் பாதை" அரும்புகிறது
ஆனால் நீடிக்குமா! நிச்சயம் நீடி
காது. 'அகண்ட சாம்ராஜ்ய
பேசிய நாஜீசமும், பாசிசமு
இங்கே போர்வை போர்த்து
கொண்டு உருவாகிறது! அங்கே
பெர்லினும் ரோமும்! இங்
டில்லி!! இந்த மமதை எப்படி நீடி
முடியும்? 'நான்' வாழமுடியாது
'நாம்' என்று, வேதனையோ
கூவும்; நமது குரல் நிச்சயம் வெற்
பெறும்.

★

**புதிய வெளியீடுகள்**

அண்ணா
தமிழகம் 1—0—
இராதாமணாளன்
சபதம் 1—0—
ஆசைத்தம்பி
வெறுங்கூடு 1—0—
மு. வரதராசன்
அல்லி 4—0—
அச்சில்
சூழ்நிலை (அண்ணா)
கிழக்கும் மேற்கும் (ஆசைத்தம்பி)

பாரி நிலையம்,
A. .59, பிராட்வே சென்னை

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinamb' St., Kancheepuram.